பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
05 09 2024 **THURSDAY** 12 40 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- இந்தியாவின் சார்பில் சர்வதேச திருவள்ளுவர் கலாச்சார மையம் சிங்கப்பூரில் அமைக்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- நாட்டின் முன்னேற்றத்திற்காக வரி செலுத்தும் நடவடிக்கைகள் எளிமையாக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
- தமிழக அரசின் சார்பில் ஆசிரியர் பணியில் சிறப்பாக செயல்பட்ட 375 பேருக்கு நல்லாசிரியர் விருதுகள் இன்று வழங்கப்பட்டன.
- தெலங்கானாவில் காவல்துறையினர் மேற்கொண்ட தேடுதல் வேட்டையில் மாவோயிஸ்ட்கள் 6 பேர் கொல்லப்பட்டனர்.
- தைபே ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில், கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் துருவ் கபிலா – தனிஷா கிறஸ்டோ இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>><<<<

சிங்கப்பூர் சென்ற பிரதமர் திரு. நரேந்திர மோடி, அங்குள்ள செமிகண்டக்டர் உற்பத்தி தொழிற்சாலையை பார்வையிட்டார். அவருடன் அந்நாட்டு பிரதமர் லாரன்ஸ் வாங்-ம் உடன் சென்றார்.

இருதலைவர்களும் இருதரப்பு ஒத்துழைப்பு தொடர்பான விவகாரங்கள், ஆசிய மண்டல மற்றும் உலகளாவிய விவகாரங்கள் குறித்து இன்று பேச்சுவார்த்தை மேற்கொண்டனர்.

அப்போது மத்திய அரசின் சார்பில் சர்வதேச திருவள்ளுவர் கலாச்சார மையம் சிங்கப்பூரில் அமைக்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

>>>><<<<

நாட்டின் முன்னேற்றத்திற்காக வரி செலுத்தும் நடவடிக்கைகள் எளிமையாக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

சென்னையில் இன்று வருவாய் கணக்கியல் வழக்கறிஞர்கள் சங்க கூட்டத்தில் பேசிய அவர், வளர்ச்சியடைந்த பாரதம் என்ற கோட்பாட்டை வலியுறுத்தி, பிரதமர் திரு. நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாகவும் பொருளாதார கட்டமைப்பை வலுப்படுத்துவதில் வெளிப்படைத்தன்மையை ஊக்குவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதன் காரணமாக, தாமாகவே முன்வந்து வரி செலுத்தும் வசதி, வரி சீரமைப்பு, சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு தொடர்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக அவர் கூறினார்.

வருவாயை அடிப்படையை கொண்டு, அரசு செயல்படாமல், எதிர்காலத்தை முன்நிறுத்தி அதற்கான அடித்தளத்தை வலுப்படுத்துவதே அரசின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

சமூகவலைதளங்களில் வரிவிதிப்பு தொடர்பான முழுமையாக விவரங்கள் பேசப்படுவதில்லை என்று குறிப்பிட்ட அமைச்சர், மத்திய-மாநில அரசுகள் வெற்றிகரமாக செயல்படுவதற்கு வரி வருவாய் முக்கியமானது என்று சுட்டிக்காட்டினார்.

ஒவ்வொரு ஜிஎஸ்டி குழுக் கூட்டத்திலும் வரி செலுத்துவோரின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பான ஆலோசனைகள் மேற்கொள்ளப்படுவதாக நிதியமைச்சர் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு நுகர்வோரும் தாங்கள் செலுத்தும் கட்டணங்கள் எந்த காரணத்திற்காக செலுத்தப்படுகின்றன என்பதை அதற்கான ரசீதுகளில் தெரிந்து கொள்ளும் வசதியை அரசு ஏற்படுத்தியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே வரி செலுத்தியவர்கள் எந்தெந்த காரணங்களுக்காக எவ்வளவு செலுத்தப்படுகிறது என்ற விவரங்கள் அறியப்படாமல் இருந்ததாகவும், பிரதமர் திரு. நரேந்திர மோடி அரசு பதவியேற்ற பின்னர் தான் நுகர்வோருக்கு தெளிவான விவரங்கள் ரசீதுகளில் கிடைக்கப் பெறுவதாக திருமதி. நிர்மலா சீதாராமன் குறிப்பிட்டார்.

>>>><<<<

ஹரியானா மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

ஹரியானாவில் மொத்தமுள்ள 90 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக அடுத்த மாதம் 5-ம் தேதி தேர்தல் நடைபெறவுள்ளது.

வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய வரும் 12-ம் தேதி கடைசி நாளாகும். வேடபுமனுக்களை திரும்பப் பெற்றுக் கொள்ள வரும் 16ஆம் தேதி கடைசி நாளாகும்.

இதனிடையே ஜம்மு-காஷ்மீரில் மூன்றாவது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப் பதிவக்கான வேட்புமனு தாக்கலும் இன்று தொடங்கியது.

மூன்றாவது கட்டமாக அங்கு 40 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கு அடுத்த மாதம் ஒன்றாம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

அங்கு வேட்புமனுக்களை தாக்கல் செய்ய வரும் 12ஆம் தேதி கடைசி நாளாகும்.

வேட்புமனுக்களை திரும்பப் பெற இம்மாதம் 17ஆம் தேதி கடைசி நாள் என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது.

ஹரியானா மற்றும் ஜம்மு காஷ்மீரில் பதிவாகும் வாக்குகள் அடுத்த மாதம் 8-ம் தேதி எண்ணப்படுகின்றன.

இதனிடையே ஜம்மு காஷ்மீரில் இரண்டாம் கட்ட வாக்குப் பதிவு நடைபெறும் 26 தொகுதிகளில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய இன்று கடைசி நாளாகும்.

இந்நிலையில் ஜம்மு காஷ்மீரில் அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் தீவிரம் அடைந்துள்ளது.

>>>><<<<

ஆசிரியர் தினம் இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

முன்னாள் குடியரசுத் தலைவர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணனின் பிறந்த நாள் ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது.

சென்னை ராதாகிருஷ்ணன் சாலையில் உள்ள அவரது இல்லத்தில் இன்று சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

திருத்தணியில் டாக்டர் ராதாகிருஷ்ணன் பயின்ற ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியிலும் இன்று ஆசிரியர் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்நாளையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்கு தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாக கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், இளம் உள்ளங்களை சிறப்பாக வடிவமைக்கும் ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவிக்கும் தருணம் இது என்று குறிப்பிட்டுள்ளார்.

இன்று மாலை புதுதில்லியில் நடைபெறும் நிகழ்ச்சியில் தேசிய நல்லாசிரியர் விருதுகளை குடியரசுத் தலைவர் வழங்குகிறார்.

>>>><<<<

அறிவையும், பண்பையும் ஊட்டி மாணவர்களுக்கு வழிகாட்டியாக திகழும் நல்லாசிரியர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதாக தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

மாநில அரசின் சார்பில் ஆசிரியர் பணியில் சிறப்பாக செயல்பட்ட 375 பேருக்கு நல்லாசிரியர் விருதுகளை மாநில இளைஞர்நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் சென்னையில் இன்று வழங்கினார்.

ஆசிரியர்கள் வாழ்க்கைக்கான வழியை காட்டுபவர்களாகவும், அதன் உண்மையான அர்த்தத்தை புரிய வைப்பவர்களாகவும் விளங்குகின்றனர் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

நாட்டின் வளர்ச்சியில் பங்காற்றும் ஒவ்வொருவரையும் உருவாக்குவதில் ஆசிரியர்களின் பங்கு ஈடுஇணையற்றது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

(சவுண்ட் பைட் - எல். முருகன் 26 செகண்ட்ஸ்)

குடியரசுத்தலைவர் மாளிகையில் இன்று நடைபெறும் தேசிய நல்லாசிரியர் விருது பெறும் ஆசிரியர் தெருவிளக்கு கோபிநாத், கற்பித்தலில் கிராமியக் கலைகளை தாம் பயன்படுத்தி வருவதாக எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - கோபிநாத் 30 செகண்ட்ஸ்)

>>>><<<<

தெலங்கானாவில் காவல்துறையினர் மேற்கொண்ட தேடுதல் வேட்டையில் மாவோயிஸ்ட்கள் 6 பேர் கொல்லப்பட்டனர்.

அங்குள்ள பத்தராத்திரி கோத்தகுடம் மாவட்ட வனப்பகுதியில் இன்று சோதனை மேற்கொண்டபோது, மாவோயிஸ்ட்களுடன் மோதல் ஏற்பட்டதாகவும், இதில் இரண்டு காவல்துறையினர் காயமடைந்ததாகவும் அம்மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.

**>>>><<<<**

இந்தியா – சவுதி அரேபியா பாதுகாப்பு ஒத்துழைப்பிற்கான கூட்டுக் குழுவின் ஆறாவது கூட்டம், ரியாதில் நேற்று நடைபெற்றது.

இருதரப்பு பாதுகாப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் விதமாக இந்திய பாதுகாப்பு இணைச்செயலாளர் திரு. அமிதாப் பிரசாத் மற்றும் சவுதி அரேபியாவின் பாதுகாப்பு இணையமைச்சர் மேஜர் ஜெனரல் சல்மான் பின் **Awadh Al-Hasbi** ஆகியோர் தலைமையில் இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இந்த பேச்சுவார்த்தையில் பாதுகாப்பு, தொழில்துறை ஒத்துழைப்பு, கூட்டு ராணுவப் பயிற்சி ஆகியவை குறித்தும் விரிவாக ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.

**>>>><<<<**

நாகாலாந்தில் கனமழை காரணமாக நேரிட்ட நிலச்சரிவில் சிக்கி, ஆறு பேர் உயிரிழந்தனர். மூன்று பேர் காயமடைந்தனர்.

கோஹிமா - திமாபூர் தேசிய நெடுஞ்சாலையில் இந்த நிலச்சரிவு ஏற்பட்டதாகவும், இதனால் நாகாலாந்து மற்றும் மணிப்பூரில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகவும் காவல்துறை தெரிவித்துள்ளது.

இந்நிலையில், நிலச்சரிவில் சிக்கியவர்களை மீட்கும் நடவடிக்கைகள் தொடர்பாக, அம்மாநில முதலமைச்சர் திரு. **Neiphiu Rio** தலைமையில் உயர்நிலைக் குழுக் கூட்டம் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>><<<<**

அஸ்ஸாம் மாநிலத்தைச் சேர்ந்த பழங்குடியின மக்களின் நிலம், மொழி, கலாச்சாரத்தை பாதுகாக்கும் வகையில் நீதிபதி **Biplab Sharma** கமிட்டி அளித்த பரிந்துரைகளை அமல்படுத்த அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநில முதலமைச்சர் திரு. ஹிமந்த பிஷ்வா சர்மா, அந்த குழு அளித்தவற்றில் 57 பரிந்துரைகள் அடுத்த ஆண்டு ஏப்ரல் 15ஆம் தேதிக்குள் செயல்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

**>>>><<<<**

தைபே ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில், கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் துருவ் கபிலா – தனிஷா கிறஸ்டோ இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

தைவானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில், இந்த இணை தைவானின் **Chang Ko Chi – Lin Yen Yu** இணையை 21-13, 22-20 என்ற நேர்செட்கணக்கில் தோற்கடித்தது.

இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டதில் இந்தியாவின் சதிஷ் கருணாகரன், சங்கர் முத்துசாமி சுப்பிரமணியன் இன்று விளையாடுகின்றனர்.

**>>>><<<<**

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியின் 100 மீட்டர் **T-12** ஓட்டத்தில் இந்தியாவின் **Simran Sharma** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெறவுள்ள வில்வித்தை கலப்புக் குழுப் போட்டியில் இந்தியாவின் பூஜா – ஹர்வீந்தர் இணை பங்கேற்கிறது.

மேலும், 50 மீட்டர் துப்பாக்கிச் சுடும் போட்டி மற்றும் 65 கிலோ வலுதூக்கும் போட்டி, ஜூடோ ஆகியவற்றில் இந்திய வீரர் வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர்.

பதக்கம் வென்ற வீரர்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

>>>><<<<

கப்பலோட்டிய தமிழர் வ உ சிதம்பரனாரின் 153-வது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நாட்டுத் தொண்டும், மொழித் தொண்டும் தனது இருகண்கள் என வாழ்ந்தவர் வ.உ.சி என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

மேலும், அவரது தியாக வாழ்வை இளைஞர்களுக்கு பயிற்றுவித்து, அவரது பெருமையை போற்றுவோம் என்று முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை மற்றும் தூத்துக்குடியில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாநில அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

>>>><<<<